மக்கள் குரல்

30-8-2009

# நோயாளிகளுக்கு பாதுகாப்பான சிகிச்சை அளிப்பது எப்படி? ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் ஆய்வு மாநாடு

சென்னை, ஆக. 30-

சென்னை ராமச்சந்திரா மருத்துவ மையமும், மருத்துவத்துறை அங்கீகார அமைப்பின் இந்திய கூட்டமைப்பும் ஏற்பாடு செய்திருந்த 'நோயாளிகளின் பாதுகாப்பு' என்ற மாநாடு ராமச்சந்திரா மருத்துவ மனையில் நடைபெற்றது.

மாநாட்டை நல்வாழ்வுத் துறை முதன்மை செயலர் வி.கே.சுப்புராஜ் துவக்கி வைத்து உரையாற்றினார்.

உலக நல்வாழ்வு அமைப்பு அறிமுகப்படுத்தியுள்ள அறுவை சிகிச்சை தணிக்கை பட்டியலை சுட்டிக்காட்டிய சுப்புராஜ், அது சில நாடுகளில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது என்று கூறினார்.

தவறான மருந்துகளின் பயன்பாட்டை தவிர்க்க மாநில அரசு 40 மருத்துவ மனைகளில் கணினிகளை பயன்படுத்தி, அச்சிடப்பட்ட மருத்துவ சீட்டுகளை வழங்குகிறது. ரூ.40 கோடி செலவில் மேலும் 200 மருத்துவ மனைகளில் இதை அமல்படுத்த அரசு திட்ட மிட்டுள்ளது. மருத்துவர்கள், மருந்துகளை பரிந்துரைப் பதில் உள்ள பரவலான வேறு பாட்டாலும் தவறான சிகிச்சைகள் ஏற்படுகின்றன என்றார்.

## அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பான ஊசி

இந்திய மருத்துவமனைகளில் போடப்படும் ஊசிகளில், 65 சதவீதம் பாதுகாப்பற்ற முறைகளில் உள்ளதாக ஒரு தனியார் தன்னார்வு நிறுவனத்தின் ஆய்வு கூறுகிறது. உலக நலவாழ்வு அமைப்பு தெரிவு செய்துள்ள ஒவ்வொரு நோயாளிக்கும் புதிய தனித்தனி ஊசியை பயன்படுத்தும் முறையையே அரசு, மருத்துவமனைகளில் நடைமுறைப் படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் பாதுகாப்பான ஊசி போடும் விகிதம் 70 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதனை 100 சதவீதமாக உயர்த்த சீரிய முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

## மருத்துவர்களுக்கு தடுப்பூசி

இந்தியாவில் 7 கோடி மக்களிடையே 'ஹெப்படைடிஸ் வைரஸ்' உள்ளது. மருத்துவமனைகளில் பல்லாயிரக்கணக் கான மக்கள் தினமும் கூடுவதால் மற்றவர்களுக்கும் இது பரவ வாய்ப்பு உள்ளது. இந்த வைரஸ் மருத்துவ பணியாளர்களை பாதிக்காமல் தடுக்க, அவர்களுக்கு பணியில் சேர்ந்த உடனேயே தடுப்பூசி போட வேண்டும்.

இவ்வாறு சுப்புராஜ் கூறினார்.

நிகழ்ச்சியில் மயக்க மருந்து மருத்துவ துறை தலைவரும், ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையத்தின் செயல் தலைவரு மான டாக்டர் மகேஷ் வக்கமுடி வரவேற்புரை ஆற்றுகையில், பெரிய மருத்துவமனைகளில் கிடைத்துள்ள நோயாளிகள் பாதுகாப்பு முறைகளின் பலன்களை, நாடெங்கிலுமுள்ள எல்லா மருத்துவமனைகளுக்கும், குறிப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கூறினார்.

## ராமச்சந்திரா நடவடிக்கை வெற்றி

ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழகத்தின் பல்துறை தலைவர் பேராசிரியர் கே.வி.சோமசுந்தரம் பேசுகையில், ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நோயாளி கள் பாதுகாப்பு முறைகளால் கூடுதல் செலவுக்கு ஏற்றவாறு நல்ல பலன்கள் கிடைத்திருப்பதாக கூறினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முக்கிய விருந்தினர்களானமருத்துவத் துறை அங்கீகார இந்திய கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் அகில் சங்கல், காமன் வெல்த் மருத்துவ கழகத்தின் தலைவர் டாக்டர் அருள்ராஜ் ஆகியோரை ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழகத்தின் வேந்தரும், ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ மையத்தில் மேலாண்மை இயக்கு னருமான வி.ஆர். வெங்கடாசலம் கவுரவித்தார்.

முடிவில் மருத்துவ இயக்குனர் டாக்டர் ஜே. தாமோதரன் நன்றியுரை யாற்றுகையில், பல் மருத்துவ மனைகளில் நோயாளிகள் பாதுகாப்பு முறைகளை அறிமுகப்படுத்த இந்த மாநாடு உதவும் என்று கூறினார்.